*59*

*அறிமுகம் (14:1-15:13):*

# கிறிஸ்தவர்கள் கருத்து வேறுபடும்போது

## (14:1-4)

*நான் சமாதானத்தையும் இணக்கத்தையும் விரும்புகிறேன். ஒவ்வொருவரும் மற்ற ஒவ்வொருவருடனும் கருத்து ஒற்றுமையாக இருக்க வேண்டும், எல்லாரும் சமாதானநிறைவுடன் வாழமுடிய வேண்டும் மற்றும் வாழவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதே வேளையில், இது ஒரு நிறைவேறக்கூடாத விருப்பம் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். மனிதர்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ, அங்கெல்லாம் கருத்துவேறுபாடுகள் உதிக்கும். அது உலகத்தைப் பொறுத்தவரையில் உண்மையாக இருப்பது மட்டுமின்றி, சபையிலும் அது உண்மையாக உள்ளது. "நாம் கருத்து* வேறுபட்டால் *நாம் என்ன செய்ய வேண்டும்?" என்பதல்ல ஆனால் "நாம் கருத்து* வேறுபடும்போது *நாம் என்ன செய்யவேண்டும்?" என்பதே கேள்வியாக உள்ளது. "நாம் கருத்து வேறுபாடுகள் கொண்டுள்ளபோது நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?"*

*அந்த பாடக்கருத்தைப் பற்றிப் பவுல், ரோமர் 14:1-15:13ல் நீண்டதாகக் கலந்துரையாடினார். ரோமர் 12:1ல் தொடங்கி, இந்த அப்போஸ்தலர் பல்வகைத் தலைப்புக்களைக் கூறிமுடித்தார், இவை ஒவ்வொன்றிற்கும், அவர் வழக்கமாக ஒருசில வசனங்களையே எடுத்துக்கொண்டார். இருப்பினும், கருத்து ஒன்றுபடாத நிலையில் நாம் பிற கிறிஸ்தவர்களிடத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் கலந்துரையாடுவதற்கு அவர், ஒரு அதிகாரத்திற்கும் அதிகமாக - முப்பத்தியாறு வசனங்களை - எடுத்துக்கொண் டார்.*

*இந்த கலந்துரையாடலின் நீளமானது, யூதக் கிறிஸ்தவர்களுக்கும் புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கு[1] மிடையில் பெரிய பிரச்சனைகள் நிலவின, மற்றும் இதுவே பவுல் ரோமருக்கு நிருபத்தை எழுதுவதற்கான பிரதான காரணமாகும்[2] என்று சில விளக்கவுரையாளர்கள் முடிவு செய்யக் காரணமாயிற்று. [இதற்குமுன்] பவுல் தொடர்பு கொண்டிருந்த பலர் ரோமாபுரியில் இருந்தனர் (காண்க 16:3, 5-15), எனவே அங்கு கருத்துவேறுபாடு நிலவியிருந்தால் அதைப் பற்றி அவர் அறிந்திருக்கலாம். இருப்பினும், பவுலின் பயணங்களில், அவர் நமது வேதபாட வசனப்பகுதியில் சித்தரிக்கப்பட்டுள்ளது போன்ற மன இறுக்கங்களைப் பல்வேறு இடங்களில் எதிர்கொண்டு இருந்திருப்பார் என்பது சாத்தியமான தாகவே உள்ளது. ஆகவே, ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட அவர், தோன்றக்*

*கூடியதான பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்கு இந்த அறிவுறுத்துதலை உள்ளடக்கினார்.*

*இந்த வேதபாட வசனப்பகுதியானது நீளமானதாக, சில வேளைகளில் விரிவான விளக்கம் தேவைப்படுவதாக உள்ளது, எனவே நான் இதைச் சுருக்கமான, மிகவும் மேலாண்மை செய்யக்கூடியவகையில் பிரிவுகளாகப் பிரித்துள்ளேன். இந்த அறிமுகப் பாடத்தில், நாம் பின்னணி விஷயங்கள் பற்றிக் கலந்துரையாடி, 1 முதல் 4 வரையிலான வசனங்களைச் சுருக்கமாக ஆராய்வோம்.*

## கவலைக்குரிய பிரச்சனைகள்

***சூழ்நிலை?***

*வேதபாட வசனத்தைப் பற்றிய நமது படிப்பைக் தொடங்கும் முன்னர், நாம் எதிர்கொள்ளவிருக்கிற சில அறைகூவல்களைப் பற்றிப் புரிந்துகொள்ளுதல் நமக்கு அவசியமாக உள்ளது. பவுலின் கலந்துரையாடலைத் தூண்டிய மிகச்சரியான சூழ்நிலை எது என்பது பற்றி நாம் உறுதியாய் எதுவும் கூற இயலாது என்பது முதல் பிரதான அறைகூவலாக உள்ளது. பவுலுக்கு சூழ்நிலை தெளிவாக இருந்தது மற்றும் ரோமாபுரியிலிருந்த வாசகர்களுக்கு உண்மை இதுதான் என்று சூழ்நிலை தெளிவாக இருந்தது, ஆனால் அது நமக்கு அவ்வாறு இருப்பது இல்லை. அது மாம்சம் புசித்தல் (14:2, 21), விசேஷித்த நாட்களை ஆசரித்தல் (14:5), மற்றும் சிலவழிகளில் திராட்சரசத்தை/மதுபானத்தை அருந்துதல் (14:21) என்பவற்றை உள்ளடக்கியிருந்தது - ஆனால் பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்தது மிகச்சரியாக என்ன என்பது பற்றி கருத்து ஒருமைப்பாடு குறைவு உள்ளது. இத்துடன் முயற்சி செய்தலுக்கு, "பலமான" சகோதரன் யார் (15:1) மற்றும் "பலவீனமான" சகோதரன் (14:1, 2; 15:1) யார் என்பது பற்றிய மிகச்சரியான கருத்தில் கருத்து வேறுபாடு உள்ளது.*

*ரோமர் 14ன் எல்லா உதாரணங்களிலும், "பலவீனமுள்ள" சகோதரர்கள் என்பவர்கள், பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் எஞ்சியவற்றை இன்னமும் பற்றித் தொங்கிக்கொண்டிருந்த யூதக்கிறிஸ்தவர்களே என்று பலர் நம்பி இணக்கம் தெரிவித்துள்ளனர். நாட்களைப் பொறுத்தமட்டிலும், அவர்கள் இன்னமும் யூத நாட்காட்டி முறையைப் பின்பற்றி வந்தனர். மாம்சம் புசித்தலைக் குறித்து, ரோமாபுரி போன்ற புறதெய்வ வழிபாட்டு சமூகத்தில், சந்தையிலிருந்து வாங்கி வந்த எந்த மாம்சமாவது* kosher[3] *ஆக இருந்ததா என்று அவர்களால் நிச்சயப்படுத்திக்கொள்ள இயலவில்லை. பாதுகாப்பான ஓட்டத்திற்கு, அவர்கள் காய்கறிகளை மாத்திரம் உண்பவர்கள் ஆயினர்.[4] இந்த அணுகுமுறையைப் பொறுத்தமட்டில், புறஜாதிக் கிறிஸ்தவர்கள் - கூடுதலாக பவுலைப்போல அறிவூட்டப்பட்ட ஒரு சில யூதக்கிறிஸ்தவர்கள் - "பெலமான" சகோதரர்களாக இருந்தனர்.*

*இந்தக் கண்ணோட்டத்தைப் பற்றிக்கொண்டிருப்பவர்கள், ரோமர் 14 மற்றும் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவற்றை உண்ணுதல் பற்றியதான, 1 கொரிந்தியர் 8-10ல் உள்ள இதைப்போன்ற கலந்துரையாடல் ஆகியவற்றிற்கிடையில் சிறிதளவே உறவு உள்ளது என்று வலியுறுத்துகின்றனர் என்பதையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். இவ்விரு வசனப்பகுதிகளுக்கிடையில் ஒற்றுமைகள் உள்ளன என்பதை ஒப்புக்கொள்ளுகையில், அவர்கள் முக்கியமான*

*வேறுபாடுகளையும் குறிப்பிடுகின்றனர்.*

*மேலே விவரிக்கப்பட்ட அணுகுமுறை சரியானதாக இருக்கலாம், ஆனால் பவுல் தமது நிருபத்தின் இப்பகுதியில், யூதக் கிறிஸ்தவர்களை "பலவீன மான" குழு என்றும் புறஜாதிக் கிறிஸ்தவர்களை "பலமான" குழு என்றும் பெயரிட்டார் என்ற முடிவைக் குறித்து நான் மனஉளைச்சல் அடைகிறேன். மேலும், நான் 1 கொரிந்தியர் 8-10 உடனான சாத்தியமான பிணைப்பு மிக விரைவாக அகற்றப்படுகிறது என்று நினைக்கிறேன். கிறிஸ்தவர்கள், விக்கிரகங் களுக்குப் படைக்கப்பட்டவற்றை உண்ணுதல் பற்றிய பிரச்சனைகள் தொடர்ந்து நினைவூட்டப்பட்ட கொரிந்து நகரிலிருந்து தானே பவுல் இதை எழுதிக் கொண்டிருந்தார்.*

*நான் அறிந்த வரையில், பழைய ஏற்பாட்டில் உணவு உண்ணுதல் குறித்த பிரமாணங்களுக்குத் தங்களை அர்ப்பணித்திருந்த யூதர்கள், உண்ணத்தக்க மாம்சத்திற்காக புறஜாதியாருடைய மாம்சக்கடைகளைச் சார்ந்திருக்கவில்லை. மாறாக, அவர்கள் தங்கள் சொந்தத்தில் மிருகங்களைக் கொன்று, நியாயப்பிர மாணத்தின்படியும் தங்கள் பாரம்பரியத்தின்படியும், அவர்களாகவே மாம் சத்தைத் தயாரித்துக்கொண்டனர். ஆகவே சந்தையிடத்தில் கிடைத்த மாம் சத்தில் சிலபகுதிகள், ஒரு விக்கிரகத்திற்குப் படைக்கப்பட்டிருந்ததன் பாகமா யிருந்தன என்று தெளிவாக அறிந்திருந்த புறஜாதிக் கிறிஸ்தவர்களே மாம்சம் உண்பதை விலக்கியிருந்தனர் என்பதற்குச் சாத்தியக்கூறு உள்ளது.*

*குறிப்பிடப்பட்ட எல்லா விஷயங்களின் மீதும், பவுல் ஒரு குழுவை "பலமான வர்கள்" என்றும் மற்றொன்றை "பலவீனமானவர்கள்" என்றும் பெயரிட்டார் என முடிவு செய்யும்படி நம்மைக் கட்டாயப்படுத்துகிற ஆதாரம் எதுவும் இருப்ப தில்லை. யூதக் கிறிஸ்தவர்கள் "பெலவீனமாக" இருக்க சாத்தியமான (நாட்களை ஆசரித்தல்) ஒரு தலைப்பையும் புறஜாதிக் கிறிஸ்தவர்கள் "பலவீன மாக" இருக்கச் சாத்தியமான (மாம்சம் உண்ணாதிருத்தல்) ஒரு தலைப்பையும் அவர் வேண்டுமென்றே தேர்ந்தெடுத்திருக்கலாம். இப்படிப்பட்ட அணுகுமுறை யானது, "நாங்கள் ஆவிக்குரிய வகையில் உங்களைவிட பலசாலிகளாக இருக்கிறோம்" என்பது பற்றிய சிந்தனைகளை அகற்றுவதாக இருக்கும். (நமக்கு நாமே நேர்மையுள்ளவர்களாக இருந்தால், நாம் சில விஷயங்களில் "பல மானவர்களாக" இருக்கும் அதே வேளையில், நாம் மற்ற விஷயங்களில் "பலவீனமானர்களாக" இருக்க சாத்தியக்கூறு உள்ளது என்பதை, நம்மில் பெரும் பான்மையானவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும்.)*

*ரோமர் 14:1-15:13ல் பவுல் தமது சிந்தையில் கொண்டிருந்த மிகச்சரியான சூழ்நிலை பற்றி நாம் உபதேசரீதியாகக் கண்டிப்புடன் இருக்க இயலாது. ரிச்சர்டு A. பேட்டி என்பவர், "அதிர்ஷ்டவசமாக, இந்தப் பகுதியில் பவுலின் போதனை பற்றிய நியாயமான புரிந்துகொள்ளுதல், அவர் தமது சிந்தையில் கொண்டிருந்த கிறிஸ்தவர்கள் பற்றிய மிகச்சரியான அடையாளப்படுத்துதலைக் கேட்ப தில்லை" என்று குறிப்பிட்டார்.[5] நாம், வசனப்பகுதியினூடே செல்லுகையில், சாத்தியக்கூறுகளைப் பற்றி நான் கலந்துரையாடுவேன், ஆனால் யூகங்களின் அடிப்படையில் முடிவுகளை அடையாதிருப்பதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.*

*நடைமுறைப் பயன்பாடு?*

*இன்னொரு கேள்வி எழும்புகிறது: இன்றைய நாட்களில் நாம் ஏற்படுத்தக் கூடிய நடைமுறைப் பயன்பாடு ஏதேனும் இதில் உள்ளதா? ரோமர் 14 மற்றும் 15 ஆகியவற்றின் இடர்ப்பாடான சூழ்நிலை எதுவாக இருந்தாலும், பவுல் இன்றைய நாட்களில் நாம் எதிர்கொள்ளும் எவ்விதமான பிரச்சனையிலிருந்தும் மிகத்தொலைவில் நீக்கப்பட்டிருப்பதாகக் காணப்படும் முதல் நூற்றாண்டுப் பிரச்சனைகளைக் கையாண்டு கொண்டிருந்தார். நமக்கு இவ்விடத்தில் செய்தி ஏதாவது உள்ளதா? ஆம். எல்லாக் காலத்திற்குமான செய்தி ஏதாவது இல்லையென்றால், பரிசுத்த ஆவியானவர் இவ்வசனப்பகுதியைப் பாதுகாத்திருக்கமாட்டார். இருபத்தியோராம் நூற்றாண்டிற்கான செய்தி என்ன?*

*ரோமர் 14ம் அதிகாரம், பலவகைப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் விசுவாசங்களை நியாயப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதைப் பற்றி, ஆண்டுகளினூடே நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எடுத்துக்காட்டாக, ரோமர் 14:1ம் வசனம். கிறிஸ்துவை விசுவாசிக்கும் எவரொருவரையும், அவர் விசுவாசிப்பது அல்லது நடைமுறைப்படுத்துவது என்ன என்பதைப் பொருட்படுத்தாமல், நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அர்த்தப்படுத்துவதாகச் சிலர் வலியுறுத்தியுள்ளனர். மிகச்சிறந்த வகையில் கேள்விகேட்கப்படக் கூடியவையான ஒழுக்கரீதியான நடைமுறைகளை நியாயப்படுத்த இவ்வசனப்பகுதி மிகவும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது. நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது, 21ம் வசனத்தின் (*"offended"; *"தவறுகிறதற்காவது" என்ற)* KJV *வார்த்தை அமைப்பு பின்வருவது போன்று பயன்படுத்தப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறேன்: "நீங்கள் செய்வது எனக்கு பிடிக்கவில்லை. அது என்னைத் தவறச்செய்கிறது; எனவே, பவுலின் போதனைப்படி, நீங்கள் அதைச் செய்வதை நிறுத்த வேண்டும்!" நாம் வசனப்பகுதியினூடே நமது வழியில் கடந்து செல்லுகையில் நான், ஐயத்துக்கிடமான இந்த நடைமுறைப் பயன்பாடுகளில் சிலவற்றைப் பற்றி எடுத்துரைப்பேன்.*

*கருத்து வேறுபாடுகள் குறித்து எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது இவ்வசனப்பகுதி கையாளுகிற நடைமுறைப் பயன்பாட்டில் மிகமுக்கியமான விஷயம் என்று என்னால் கூறமுடியும். இது* NASB *வேதாகமத்தில் 14ம் அதிகாரத்தின் தொடக்கத்திலேயே சுட்டிக் காண்பிக்கப்படுகிறது:* "Now accept the one who is weak in faith, but not for the purpose of passing judgment on his *opinions*" (v. 1; emphasis mine). *"விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக் கொள்ளுங்கள்; ஆனால் அவனுடைய அபிப்பிராயங்கள்மேல் தீர்ப்பு செய்யும் நோக்கத்திற்காக அல்ல" (வசனம் 1; என்னால் வலியறுத்தப்படுகிறது).*[6] *"அவனுடைய மன ஐயங்கள்" என்ற சொற்றொடர், இவ்வசனத்தில் "அற்பமானவை பற்றி கவலைப்படுதல்" என்பதைக் குறிக்கும் ஒரு கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*[7] *இவ்வசனப்பகுதியானது - "தற்செயலானவை," "அத்தியாவசியமற்றவை," "இரண்டாம் நிலை விஷயங்கள்," "அற்பமானவை," மற்றும் "கருத்து வேறுபாடுள்ள விஷயங்கள்" ஆகியவை உட்பட - அபிப்பிராயக் கருத்தின் விஷயங்களைக் கையாளுகிறது என்பதை விளக்கப்படுத்தப் பல வார்த்தைகளையும் சொற்றொடர்களையும் எழுத்தாளர்கள் பயன்படுத்துகின்றனர்.*

*புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தை மீளக்கட்டுவித்தலுக்குத் தங்களை*

ஒப்புக்கொடுத்துள்ளவர்கள் "விசுவாச விஷயம்" (வேதவாக்கியங்களில் தெளிவாகப் போதிக்கப்பட்டுள்ளவை) மற்றும் "அபிப்பிராய விஷயம்" (வேதவாக்கியத்தில் குறிப்பான அறிவுறுத்துதல் எதுவும் தரப்பட்டிராத விஷயம்) ஆகியவற்றிற்கிடையில் ஒரு வேறுபாட்டை எப்போதுமே ஒப்புக்கொண்டுள்ளனர். கடந்த காலத்தில் கேள்விப்பட்ட ஒரு கொள்கையாவது: "விசுவாச விஷயங்களில் ஒருமைப்பாடு; கருத்து விஷயங்களில் சுயாதீனம்; மற்றும் எல்லா விஷயங்களிலும், அறச்சிந்தனை [அல்லது அன்பு]."[8] ரோமர் 16:17ல் பவுல், *விசுவாசத்தின்* விஷயங்களில் கருத்து வேறுபாடுகளை நாம் எவ்வாறு கையாள வேண்டும் என்று விளக்கப்படுத்தினார். நமது வசனப்பகுதியானது, *அபிப்பிராய/ கருத்து* விஷயங்களில் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைக் குறித்ததாக இருக்கிறது.

நான் சரிபார்த்துக்கொண்ட விளக்கவுரை ஒவ்வொன்றும், ரோமர் 14:1-15:13ன் நடைமுறைப் பயன்பாடு என்பது கருத்தின் விஷயங்களுடன் எல்லைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கின்றன. எடுத்துக்காட்டாக, டக்ளஸ் J. மூ என்பவர், "இவ்விடத்தில் பவுல் வற்புறுத்துகிற சகிப்புத் தன்மையை நாம் *எல்லா* விஷயங்களுக்கும் விரிவாக்க இயலாது. ... நாம் ... ரோமர் 14:1-15:13ன் சகிப்புத்தன்மையைப் பவுல் இவ்விடத்தில் நடத்துகிறது போன்ற விஷயங்களுக்கு நடைமுறைப்படுத்துவதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்" என்று குறிப்பிட்டார்.[9] அதேவேளையில் பெரும்பான்மையான எழுத்தாளர்கள், கருத்தின் விஷயங்கள் என்று தாங்கள் கருதும் உபதேச மற்றும் ஒழுக்கரீதியான விஷயங்கள் பற்றிய தங்கள் சொந்தப் பட்டியலை உள்ளடக்குவதை எதிர்த்து நிற்க முடியாது.[10] அவர்களின் பட்டியல்கள், ஞானஸ்நானம் என்பது முழுக்காட்டுதலாக இருக்க வேண்டுமா இல்லையா மற்றும் சூதாடுதல் போன்ற ஒழுக்கரீதியான விஷயங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

ரோமர் 14ஐ நடைமுறைப்படுத்துவதில், தனிநபர்கள் தாங்கள் *நிரூபிக்க* தேவையானவற்றை *யூகித்தல்* என்பது பொதுவான நடைமுறையாக உள்ளது. அதாவது, அவர்கள் இந்த அல்லது அந்த விஷயம் கருத்தின் விஷயமாக உள்ளது என்று *யூகித்துக்கொண்டு* பின்பு அதற்கு ரோமர் 14ஐ நடைமுறைப்படுத்துகின்றனர். எந்த ஒரு பிரச்சனைக்கும் ரோமர் 14ஐக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்துவதற்குமுன், அந்தப் பிரச்சனை கருத்து விஷயம் என்ற வகைப்பாட்டில் அடங்குகிறது என்பது முதலாவது நிலைநாட்டப்பட வேண்டும். இது சுலபமானதல்ல. பல பிரச்சனைகள் விசுவாசத்தின் விஷயங்கள் என்று சில கிறிஸ்தவர்களால் கருதப்படுகின்றன, அதேவேளையில் மற்ற கிறிஸ்தவர்கள் அவற்றை கருத்து விஷயங்கள் என்று சம அளவில் இணங்குகின்றனர்.

இது ரோமர் 14:1-15:13 வசனப்பகுதியானது இன்றைய நாட்களில் நமக்குக் கூறுவதற்குக் கொஞ்சம் விஷயங்களையே கொண்டுள்ளது என்று அர்த்தப்படுகிறதா? இல்லவே இல்லை. சபையில், நாம் விசுவாச விஷயங்கள் தொடர்பான பிரச்சனைகளில், *சிலவேளைகளில்* கருத்து வேறுபடுகிறோம், ஆனால் பெரும்பான்மையான பங்கேற்பாளர்கள் (முறுமுறுப்புடன்) ஒப்புக்கொள்ள வேண்டியதான கருத்தின் வட்டாரமே நாம் *அடிக்கடி* கருத்து வேறுபடுகிற விஷயங்களாக உள்ளன. எனது வாழ்நாள் காலத்தின்போது, ஒரு சில உபதேச விஷயங்களே சபையைப் பிரித்துள்ளன என்பதை நான் கண்டிருக்கிறேன். அதே காலகட்டத்தில், கருத்தின் விஷயங்கள்மீது சபைக்குழுமத்தின் ஒன்றிணைவு நூற்றுக்கணக்கான

முறைகள் அழிக்கப்பட்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்காக சபையின் கருவூலத்திலிருந்து பணம் செலவழிப்பதென்று தீர்மானம் மேற்கொள்ளப்படுகிறது, மற்றும் சிலர் கர்த்தருடைய பணத்தில் அப்படிப்பட்ட வெட்கக்கேடான வீண்செலவு கூடாதென்று வன்மையாக (மற்றும் உரத்த குரலில்) எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். மீண்டுமாக, ஒரு சபைக்குழுமத்தின் மூப்பர்கள் ஒரு புதிய பிரசங்கியாரைப் பெற்றுக்கொள்வதற்கான வேளை வந்துள்ளது என்று முடிவுசெய்கின்றனர் மற்றும் தற்போதுள்ள பிரசங்கியாரை நேசிப்பவர்கள் கலகம் செய்ய எழுகின்றனர். ஒருவேளை நீங்கள், வழக்கின் இருபக்கங்களுள்ள கருத்து வட்டாரத்தில், கேள்விகள் மீது கருத்து வேறுபாடுகளுக்கான உங்கள் சொந்த உதாரணங்களைக் கூட்டிக்கொள்ள முடியலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளின்போது ரோமர் 14 மிகவும் உதவிநிறைந்ததாக இருக்கிறது. இவ்வசனப்பகுதி, சபையிலே கருத்து வேறுபாடுகள் பற்றிய ஒவ்வொரு பிரச்சனையையும் தீர்த்துவைக்க முடியாது; ஆனால், இது பின்பற்றப்பட்டால், இது அவற்றில் பலவற்றைத் தீர்த்துவைக்கும்.

அதைக்கூறியுள்ள நிலையில், நாம் ஒரு விஷயத்தைக் கருத்தின் விஷயம் என்றோ அல்லது விசுவாசத்தின் கேள்வி என்றோ எப்படிக் கருதினாலும், அதைப்பற்றி நம்முடைய சகோதரர் ஒருவருடன் நாம் கருத்து வேறுபடும் *எந்த* வேளையிலும் நமக்கு வழிகாட்டுதல்களைத் தரும் சில *பொதுவான* கொள்கைகளை இவ்வசனப்பகுதியிலிருந்து நாம் இழுக்க முடியும் என்று நம்புகிறேன். நாம் *எப்போதெல்லாம்* மற்ற மக்களுடன் கருத்து வேறுபடுகிறோமோ அப்போதெல்லாம் அந்தச் சூழ்நிலையைப் பொருட்படுத்தாத வகையில் நமக்கு உதவிகரமாக இருக்கக்கூடிய கொள்கைகளும் உள்ளன. இவ்விடத்தில் காணப்படும் கொள்கைகள் சபைகளுக்கு மாத்திரமல்ல; ஆனால் திருமணங்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கும்கூட உதவ முடியும். ரோமர் 14ஐப் பற்றிய நமது படிப்பை நாம் முடித்தபின்பு, கடைசிக் குறிப்புகள் மற்றும் ஆலோசனைகளுடன் பல பல்நோக்குக் கொள்கைகளை நான் கொடுப்பேன். (இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் காணப்படும் "சிதறிவிடாமல் கருத்து வேறுபடுதல்" என்ற பாடத்தைக் காணவும்.)

## அடிப்படை அனுமானம் (14:1-4)

நமது வேதபாட வசனப்பகுதியை அறிமுகப்படுத்தும் வேளை வந்துவிட்டது. இவ்வசனப்பகுதி இயல்பாகவே மூன்று பாகங்களாகப் பிரிந்துள்ளது: 14:1-12; 14:13-23; மற்றும் 15:1-13. இந்தப் பிரிவுகளின் திறவுகோல் சிந்தனைகள் பின்வருமாறு தொகுத்துரைக்கப்படலாம்: (1) ஒருவர் மற்றவரை ஏற்றுக்கொள்ளுங்கள் (காண்க 14:1), (2) ஒருவர் மற்றவருக்கு பக்திவிருத்தியூட்டுங்கள் (காண்க 14:19), மற்றும் (3) ஒருவர் மற்றவரைப் பிரியப்படுத்துங்கள் (காண்க 15:2). இந்தப் பாடத்தினுடைய எஞ்சியப்பகுதியானது 14:1-4ஐ மையங்கொண்டிருக்கும். இந்த வசனங்களில் நாம், இந்த முழுப்பகுதிக்கும் அடிப்படை அனுமானத்தைக் கண்டறிகிறோம் (இது முதல் பிரிவிற்கு ஆய்வுக் கருத்தாகவும் உள்ளது). இவ்வசனப்பகுதி, "விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் *சேர்த்துக்கொள்ளுங்கள்*" என்று தொடங்குகிறது (14:1அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பிற்பாடு, நாம் இந்தப் பகுதியின் முடிவை நெருங்கும்போது, "ஆதலால்

தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை *ஏற்றுக்கொண்டது போல*, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்'' என்று வாசிப்போம் (ரோமர் 15:7; என்னால் வலியுறுத்தப்படுகிறது). இந்தப் பாடத்தின் எஞ்சிய பகுதியில், நாம் முதலில் பவுலினால் விவரிக்கப்பட்ட கருத்து வேறுபாட்டைக் கண்ணோக்குவோம், பின்பு "ஒருவரையொருவர் *ஏற்றுக் கொள்ளுங்கள்*'' என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்று ஆழ்ந்து சிந்திப் போம்.

**கருத்து வேறுபாடு (வசனங்கள் 1, 2)**

பவுல், "விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள்; ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள்'' என்று தொடங்கினார் (14:1). " 'விசுவாசத்தில் பலவீனமுள்ளவன்' என்பதன் மூலம் பவுல் எதை அர்த்தப்படுத்தினார்?'' என்பதே முதலில் எழும் கேள்வியாக உள்ளது. கிரேக்க வசனத்தில், 1ம் வசனத்தில் "விசுவாசம்'' என்ற வார்த்தைக்கு முன்னர் ஒரு திட்டவட்டச் சுட்டுச்சொல் உள்ளது (KJV; McCord ஆகிய வேதாகமங்களில் காணவும்). புதிய ஏற்பாட்டில், இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தை மையங்கொண்ட போதனையின் கருத்தைக் குறிப்பதற்கு "the faith'' என்ற சொற்றொடர் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது (எடுத்துக்காட்டாக, கலாத்தியர் 1:23ஐக் காண்க). ஆகவே, "விசுவாசத்தில் பலவீனமுள்ளவன்'' என்பது, வேதவசனங்கள் பற்றிய அறிவில் குறைவுபட்டுள்ள கிறிஸ்தவரை - ஒருவேளை புதிதாக மனம்மாறிய ஒருவரை - குறிப்பதாக இருக்கலாம். "விசுவாசத்தில் பலவீனமுள்ளவன்'' என்று விவரிக்கப்பட்டுள்ளவர்கள் புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டுள்ளபடி கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் சுயாதீனத்தைப் புரிந்துகொள்ளாதிருந்தனர் என்பது நிச்சயம்.

இருப்பினும், வேதபாட வசனப்பகுதியினூடே நாம் கடந்து செல்லு கையில், இவ்வசனப்பகுதியில், பவுல் "விசுவாசம்'' என்ற வார்த்தையை இந்த நிருபத்தின் எஞ்சிய பகுதியில் பயன்படுத்தியதிலிருந்து ஓரளவுக்குச் சற்றே மாறுபட்ட வகையில் பயன்படுத்தியது உறுதி என்பதைக் கவனிப்போம். எடுத்துக் காட்டாக, பவுல், "உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன் மட்டும் இருக்கட்டும்'' என்று கூறினார் (வசனம் 22அ). வேறுவார்த்தைகளில் கூறுவ தென்றால், உங்கள் "விசுவாசத்தை'' உங்களுக்கு மட்டுமென்று வைத்துக் கொள்ளுங்கள். கிறிஸ்தவர்கள் *இயேசுவில் கொண்டுள்ள* விசுவாசத்தைத் தங்களுக் கென்று மாத்திரம் வைத்துக்கொள்ளும்படி பவுல் *ஒருக்காலும்* கூறியிருக்க மாட்டார். எனவே இவ்விடத்தில் "விசுவாசம்'' என்பது வேறுபட்ட அர்த்தம் கொண்டதாக இருக்கவேண்டும். "விசுவாசம்'' என்பது [இவ்விடத்தில்] முழுமையும் இசைந்திருத்தல் அல்லது இணங்கி நம்பியிருத்தல் என்ற வேர் அர்த்தம் கொண்ட *pistis* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட் டுள்ளது.[11] ஒருவர் இசைவிக்கப்பட்டிருத்தல் பற்றிய விஷயமானது வசனத்தில் உள்ளார்ந்து இருப்பதில்லை; அது சந்தர்ப்பப்பொருளினால் அளிக்கப்பட வேண்டியதாக உள்ளது. ரோமருக்கு எழுதிய நிருபத்தின் பெரும்பான்மையான பகுதியில், "விசுவாசம்'' என்ற வார்த்தையை இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தைக் குறிப்பதற்குப் பவுல் பயன்படுத்தினார்; ஆனால் ரோமர் 14ல் இவ்வார்த்தை கலந்துரையாடலின்கீழுள்ள பாடக்கருத்து பற்றிய *பலத்த தனிப்பட்ட உறுதிப்*

பாட்டைக் குறிப்பதற்கே முதன்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பலத்த தனிப்பட்ட உறுதிப்பாடு தேவனுடைய வசனத்தின் அடிப் படையில் அல்லது வசனத்தைப் பற்றிய தவறான சில புரிந்துகொள்ளுதலின் அடிப் படையில் அமையலாம். இது ஒரு தனிநபருக்கு அவரது வாழ்நாள் முழுவதிலும் போதிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் அல்லது ஏறக்குறைய தகவலின் அல்லது தவறான தகவலின் எந்த ஒரு ஆதாரமூலத்தின் அடிப்படையில் அமையலாம், ஆதாரமூலம் எதுவாக இருந்தாலும், உறுதிப்பாட்டைப் பற்றிக்கொண்டுள்ளவர் அது உண்மையானது என்று உண்மையாகவே நம்புகிறார்/விசுவாசிக்கிறார்.

ஆகவே, இவ்வசனப் பகுதியில், "விசுவாசத்தில் *பலவீனமுள்ளவன்*" என்பது, ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் ஒரு சகோதரர் எவ்வளவு உண்மையாக இருந்தாலும், அவரது உறுதிப்பாட்டில் *தவறான* சில விஷயம் உள்ளது என்று அர்த்தப்படுகிறது. குறிப்பிட்ட இந்த விஷயத்தில் யாருடைய உறுதிப்பாடு *சரியானதாக* உள்ளதோ அவரே "விசுவாசத்தில் *பலமுள்ளவராக*" இருக்கிறார்.

கலந்துரையாடல் 2ம் வசனத்தில் தொடருகிறது: "ஒருவன் ['பலமான' சகோதரன்] [மாம்சம் உட்பட] எந்தப் பதார்த்தத்தையும் புசிக்கலாமென்று நம்புகிறான் [ஒரு பலத்த உறுதிப்பாடு]; பலவீனனோ மரக்கறிகளை மாத்திரம் புசிக்கிறான்." சிலர் உடல்நலக் காரணங்களுக்காக மாம்சம் உண்பதைத் தவிர்க்கின்றனர், ஆனால் இவ்வசனமானது உடல்நலம் பற்றிய அக்கறைகளை யல்ல, மதரீதியான ஐயங்களைப் பற்றியே கலந்துரையாடுகிறது. ஏற்கனவே குறிப்பிட்டபடி, non-kosher (அல்லாத) மாம்சத்தைப் புசிக்க மறுத்திருந்த யூதக் கிறிஸ்தவர்கள் மரக்கறிகளை மாத்திரம் புசிப்பவர்களாக இருந்திருக்கலாம். ஒருவேளை சந்தையிடத்தில் விற்கப்பட்ட மாம்சம் விக்கிரகங்களுக்கும் படைக்கப் பட்டதாயிருக்கும் என்பதை அறிந்திருந்த புறஜாதிக் கிறிஸ்தவர்கள் மரக்கறிகளை மாத்திரம் புசிப்பவர்களாக இருந்திருக்கலாம்.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாம்சம் சந்தையிடத்திற்கு எவ்வாறு வந்தது? புறதெய்வ ஆராதனை செய்பவர் ஒருவர் புறதெய்வக் கோவிலுக்கு ஒரு மிருகத்தை இட்டுச் சென்றார், அங்கு அது புறதெய்வத்திற்குப் படைக்கப்பட்டது. ஒரு ஆசாரியர் அந்த மிருகத்தைக் கொன்று அதிலிருந்து தேர்ந்தெடுத்த மாம்சத் துண்டுகளைப் பீடத்தின்மீது வைத்தார். எஞ்சியுள்ளவற்றில் ஒரு பங்கை அந்த ஆசாரியர் தமக்கென்று வைத்துக்கொண்டார், மற்றும் மீதியானது வருமானத் திற்கு ஆதாரமூலமான சந்தையிடத்திற்கு அனுப்பப்பட்டது. விக்கிரகாரா தனையில் வளர்க்கப்பட்டிருந்த புறஜாதிக் கிறிஸ்தவர்கள், இந்த மாம்சத்தை விக்கிரகங்களுடன் இதற்குள்ள தொடர்பைப்பற்றி நினைக்காமல் உண்ப தற்குக் கடினமான வேளையைப் பெற்றிருந்தனர் (காண்க 1 கொரிந் தியர் 8:7).[12] பாதுகாப்பான பகுதியிலிருப்பதற்காக அவர்களில், சிலர் மாம்சம் உண்பதையே முற்றிலுமாகத் தவிர்த்தனர்.

"பலவீனமான" சகோதரன் எனப்படுபவர், நியாயப்பிரமாணத்தைக் கடைபிடித்த யூதர் என்றால், "பலமான" சகோதரன் எனப்படுபவர், கிறிஸ்தவர்கள் இனியும் மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் கட்டப்பட்டிருப்பதில்லை என்பதைப் புரிந்துகொண்டிருந்த ஒருவராக இருந்தார் (காண்க ரோமர் 7:4, 6). மாம்சமானது kosher கேட்புகளைச் சந்திக்கத் தேவையில்லாதிருந்தது. "பலவீனமான" சகோதரர் எனப்படுபவர், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாம்சத்தைக் குறித்து அதிகமாய்க் கவலைப்பட்ட புறஜாதிக் கிறிஸ்தவராக

இருந்தார் என்றால், "பலமான சகோதரர்" எனப்படுபவர், விக்கிரகம் ஒரு உயிர்ப் பொருள் அல்ல (காண்க 1 கொரிந்தியர் 8:4) என்றும், எனவே விக்கிரகத்திற்கு ஒரு மிருகத்தைப் படைப்பது அதன் மாம்சத்தை எந்த வகையிலும் பாதிப்ப தில்லை என்றும் புரிந்துகொண்டிருந்த ஒரு சகோதரராக இருந்தார். ரோமர் 14ல் சற்றுப் பிற்பாடு பவுல், "ஒரு பொருளும் [எந்த உணவும்] தன்னிலே தீட்டுள்ள தல்ல" என்று கூறினார் (வசனம் 14; காண்க மாற்கு 7:19). பவுல் தீமோத் தேயுவுக்கு எழுதிய முதல் நிருபத்தில், அவர் "தேவன் படைத்த போஜன பதார்த் தங்களை" பற்றிப் பேசினார், பின்பு "தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக் கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத் தக்கதல்ல" என்று கூறினார் (1 தீமோத்தேயு 4:3, 4). மாம்சம் புசித்தலைக் குறித்து, "பலமான" சகோதரர் இதைப் புரிந்துக்கொண்டிருக்க, அதே வேளையில் "பலவீனமான" சகோதரர் இவ்விஷயம் பற்றிய அறிவிலும் உட்கண்ணோக்கிலும் குறைவுபட்டிருந்தார் (காண்க 1 கொரிந்தியர் 8:7).

"மனச்சாட்சி" என்பதற்கான (*suneidesis* என்ற) கிரேக்க வார்த்தை ரோமர் 14:1-15:13 வசனப்பகுதியில் காணப்படுவதில்லை, ஆனால் அந்தக் கருத்து அங்குள்ளது. NLT வேதாகமம் 14:2ல் உள்ள "பலவீனன்" என்பதை "who has a sensitive conscience" என்று தரவழைக்கிறது.[13] "பலவீனமான" சகோதரர் மனச்சாட்சி யுடன் மாம்சத்தை உண்ண இயலாதிருந்தார், அதே வேளையில் "பலமான" சகோதரர் அதை உண்பது அவர் மனச்சாட்சியை மீறுதலாக இருக்கவில்லை.

### அறைகூவல் (வசனங்கள் 1, 3, 4)

1. *கொள்கை.* நாம் கருத்து விஷயங்களில் உணர்வுப்பூர்வமாகக் கருத்து வேறுபடும்போது, ஒருவர் மற்றவரை எவ்வாறு நடத்த வேண்டும்? முதலில் பவுல், "பலமான" சகோதரருக்கு அறைகூவல் விடுத்தார்: "விசுவாசத்தில் பலவீனமுள்ள வனைச் *சேர்த்துக்கொள்ளுங்கள்*" (14:1அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "சேர்த்துக்கொள்ளுங்கள்" என்பது "ஒருவரை எடுத்துக்கொள்ளுதல்" என்பதைக் குறிக்கிற *proslambano* (*pros* ["க்கு"] கூட்டல் *lambano* ["பெற்றுக்கொள்ள"]) என்ற வார்த்தையிலிருந்து வந்துள்ளது. இது "பெற்றுக்கொள்பவர்மீது *வரவேற்பு* என்பதை கருத்தாகத் தெரிவிக்கிற ஒரு விசேஷித்த ஆர்வத்தை" சுட்டிக் காண்பிக்கிறது.[14] அவர்களை முறுமுறுப்புடனோ, அல்லது தயக்கத்துடனே அல்ல, ஆனால் விரித்த கரங்களுடனும் திறந்த இருதயங்களுடனும் உங்கள் ஐக்கியத்தில் ஏற்றுக்கொள்ளுங்கள்.

பவுல் கூடுதலாக, "ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள்" என்று கூறினார் (வசனம் 1ஆ). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் எவ்வளவு தவறானவராக இருக்கிறார் என்பதை அவருக்கு காண்பிக்க நீங்கள் ஒரு வாய்ப்பைக் கொண்டிருக்க மாத்திரம் அவரை உங்கள் ஐக்கியத்திற்கு அழைக்காதீர்கள். JB வேதாகமம், "welcome him ... without starting an argument" என்று கூறுகிறது. ஒரு விவரிப்பு சிந்தைக்கு வருகிறது. வெள்ளிக்கிழமைகளில் மாம்சம் உண்ணுதல் தவறு என்று போதிக்கும் மதக்குழு ஒன்றுபற்றி நாம் நினைப்போமாக. அந்த மார்க் கத்தில் வளர்க்கப்பட்ட ஒருநபருக்கு நீங்கள் போதித்து மனமாற்றுவதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அந்த நபர் ஞானஸ்நானத் தண்ணீரிலிருந்து வெளியே வருகையில், வெள்ளிக்கிழமையில் மாம்சம் உண்ண மறுத்தலாகிய

மதியீனத்தின்மீது அவருக்கு ஒரு விரிவுரையாற்ற அவரை நீங்கள் ஒரு பக்கமாக இழுக்க வேண்டுமா? இல்லையே. அவர் முகத்தில் ஒரு சொல்லடி தேவைப்படுகிறவர் அல்ல, ஆனால், அவர் கிறிஸ்துவுக்குள் வரவேற்பு அணைப்பு தேவைப்படும் வலுவற்ற ஒரு குழந்தையாக இருக்கிறார். காலம் ஆகும்போது அவர் அந்த விஷயம்பற்றி ஆவிக்குரிய உட்கண்ணோட்டத்தை ஆதாயப்படுத்திக்கொள்வார், ஆனால் ஏற்றுக்கொள்ளப்படுதல் என்பதே அவருக்குத் தேவையான முதல் விஷயமாக உள்ளது.

2. *நடைமுறைப் பயன்பாடு.* "பலமானவரோ" அல்லது "பலவீனமானவரோ" யாராயிருப்பினும் எல்லாக் கிறிஸ்தவர்களையும் உள்ளடக்குவதற்கு, சகோதரரை ஏற்றுக்கொள்ளும்படியான அறைகூவல் 15:7ல் விரிவாக்கப்பட்டுள்ளது. "பலமானவர்கள்" "பலவீனமானவர்களை" ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? மற்றும் "பலவீனமானவர்கள்" "பலமானவர்களை" ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது?

3ம் வசனத்தில் பவுல் முதலில் "பலமானவர்களுக்கு" அறிவுரை கூறினார்: "[மாம்சம்] புசிக்கிறவன் [மாம்சம்] புசியாதிருக்கிறவனை அற்பமாயெண்ணாதிருப்பானாக" (14:3அ). "அற்பமாயெண்ணுதல்" என்பது, "முற்றிலுமாகப் பழித்தல்," இன்னொருவரை அவர் ஒருநபரே அல்ல என்ற வகையில் நடத்துதல் என்று அர்த்தப்படுகிற (*exoutheneo* என்ற) (*ex* ["வெளியே"] கூட்டம் *oudeis* ["ஒருநபரே அல்ல"])[15] பலத்த வார்த்தையிலிருந்து வந்துள்ளது. தங்களை மற்ற கிறிஸ்தவர்களைக் காட்டிலும் அதிகம் அறிவொளி பெற்றவர்களாகக் கருதிக்கொண்டுள்ள சிலரின் வெளியீடுகளை நான் வாசித்திருக்கிறேன். அவற்றின் பக்கங்களில் ஏளனமும் பழிப்புரையும் சொட்டியது. ஒரு விஷயத்தின் மீது நீங்கள் உங்களை "பலமானவர்" என்று கருதுகிறீர்களா? உங்களுடன் கருத்தொருமைப்படாத சகோதரர் ஒருவரை நீங்கள் "அற்பமாய் எண்ண வேண்டாம்" என்று பவுல் உங்களுக்குக் கூறினார்.

பின்பு பவுல், தாம் "பலவீனமானவர்கள்" என்று பெயரிட்டிருந்தவர்கள் பக்கமாகத் தமது கவனத்தைத் திருப்பினார்: "[மாம்சம்] புசியாதிருக்கிறவனும் [மாம்சம்] புசிக்கிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக" (வசனம் 3ஆ). 14ம் அதிகாரத்தில் பவுல், நியாயந்தீர்த்தல் பற்றி அதிகமாகக் கூறினார் (காண்க வசனங்கள் 1, 3, 4, 10, 13[16]). "நியாயந்தீர்த்தல்" என்பது "தீர்மானித்தல்,"[17] ஒரு தீர்ப்பை ஏற்படுத்துதல் என்று அர்த்தப்படுகிற *krino* என்பதிலிருந்து வந்துள்ளது. *Krino* என்பது எப்போதும் ஒரு எதிர்மறை கருத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, ரோமர் 14ல் இது 5ம் வசனத்தில் "எண்ணுதல்" என்றும் 13ம் வசனத்தில் "தீர்த்தல்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பவுலின் விவரிப்பிற்குப் பொருத்தமானவர்கள் பற்றிய ஒரு தீர்ப்பை ஏற்படுத்தாது நாம் ரோமர் 16:17ல் உள்ள பவுலின் தடையுத்தரவிற்கு கீழ்ப்படிய இயலாது. இருப்பினும், *krino* என்பது, சாதகமற்ற தீர்ப்புகளைச் செய்தல், விமர்சனம் பண்ணுதல், பிழை கண்டுபிடித்தல், மற்றும்/அல்லது கண்டனம் பண்ணுதல் ஆகியவற்றைக் குறிப்பதற்கு எதிர்மறையான வகையிலேயே அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளது - மற்றும் இவ்விடத்தில் அதுவே விஷயமாக உள்ளது. 14:3ஆ வசனப்பகுதியில் AB வேதாகமம், "Let not him who abstains [from eating meat] criticize and pass judgment on him who eats" என்று கூறுகிறது.

ஒரு குறிப்பிட்ட பழக்கமானது தவறாக இருப்பதாக நீங்கள் நம்பினால், உங்களுடன் கருத்து வேறுபடுபவர்களிடத்தில் இரக்கமின்றி மற்றும் சகிப்புத் தன்மையின்றி நடந்துகொள்ளுதல் சுலபமானதாக உள்ளது. மற்ற கிறிஸ்தவர் களின் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்கென்று அர்ப்பணித்துக் கொண்டுள்ள பத்திரிக்கைகளை நான் வாசித்திருக்கிறேன். இவற்றில் சில, கடுமையான மற்றும் தீர்ப்பு அளிக்கும் தொனியைக் கொண்டுள்ளன.

ஒருவர் தமது சகோதரனைத் தீர்ப்பிடுதலைத் தவிர்த்தாக வேண்டும், ஏனெனில் "தேவன் அவனை ஏற்றுக்கொண்டாரே" (14:3இ). அந்த சகோதரர் கிறிஸ்தவரானபோது, தேவன் அவரைத் தமது பிள்ளையாக ஏற்றுக்கொண்டார். "ஏற்றுக்கொண்டார்" என்பது 1ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பின்வரும் சிந்தனை மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது: அவரைத் தேவன் ஏற்றுக்கொண்டார் என்றால், நாமும் அவ்வாறே செய்ய வேண்டும். ஜிம்மி ஆலென் என்பவர், "கிறிஸ்து ... நம்மை நமது மோசமான இயல்புகளை மறைக்காது வரவேற்றார்" என்று குறிப்பிட்டார், அத்துடன் நாம் "ஒருவர் பிறருக்காக அதேவகையான அக்கறை கொண்டிருக்க வேண்டும்" என்பதையும் கூடுதலாகக் கூறினார்.[18]

நாம் கிறிஸ்தவரல்லாதவர்களை நமது ஐக்கியத்திற்குள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பவுல் கருத்துத் தெரிவிக்கவில்லை. அவர் குறிப்பிட்ட மக்கள், தேவன் ஏற்றுக்கொண்டிருந்த மக்களாக (வசனம் 3): தேவனுடைய ஊழியக்காரர்களாக (வசனம் 4), கர்த்தருக்கு உரியவர்களாக (வசனம் 8), மற்றும் கிறிஸ்துவுக்குள் சகோதரர்களாக (வசனம் 10) இருந்தனர்.

பின்பு அப்போஸ்தலர் தமது வாசகர்களிடத்தில் "மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்?" என்று கேட்டார் (வசனம் 4அ). "வேலைக்காரன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*oiketes* என்ற) வார்த்தையானது "ஊழியக்காரன்" என்பதற்கான வழக்க மான வார்த்தையாக இருப்பதில்லை; இது "வீடு" என்பதற்கான (*oikos* என்ற) வார்த்தையிலிருந்து தரவழைக்கப்பட்டுள்ளது.[19] *Oiketes* என்பது வீட்டில் வேலைபார்க்கும் நபரைக் குறிக்கிறது. உங்களுக்காக ஒருவர் வேலைபார்த்துக் கொண்டிருந்து, பல ஆண்டுகளாக உங்களின் நம்பிக்கைக்குரிய வேலைக்காரராக அவர் இருக்கையில், உங்கள் வீட்டிற்கு உங்களைச் சந்திக்க வந்த ஒருவர், உங்கள் வேலைக்காரர் வேலைசெய்யும் விதம் பற்றி விமர்சிக்கத் தொடங்கினால் உங்களுக்கு எப்படி இருக்கும்? நீங்கள் எவ்வாறு பதில்செயல் புரிவீர்கள்? ஒரு வேளை நீங்கள் உங்கள் விருந்தினரிடம், *அவரது* கருத்தல்ல ஆனால் *உங்கள்* கருத்தே பொருட்படுத்தப்படக்கூடியது என்று (மென்மையாக) கூறுவீர்கள். பவுல், "நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்திர வாதி" என்று கூறினார் (வசனம் 4ஆ).

செய்தியானது பகுத்தறியச் சுலபமானதாக உள்ளது. நீங்களும் நானும் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கிறோம், மற்றும் ஒருநாளிலே நாம் தேவனிடத்தில் நமது ஊழியத்துவம் குறித்துக் கணக்கு ஒப்புவிப்போம் (காண்க வசனங்கள் 10ஆ-12). யார் "நிற்பார் அல்லது விழுவார்" என்பதை தேவனே முடிவுசெய்வார். அதேவேளையில், நீங்களும் நானும் ஒருவர் மற்ற வரை நியாயந்தீர்ப்பதில் அமரும் வேலை கொண்டிருப்பதில்லை.[20] ரோமர் 12ஐப் பற்றிய நமது படிப்பில், பழிவாங்குதல் என்பது தேவனுடைய வேலை

என்பதால் நாம் அதைச் செய்யக்கூடாது என்று குறிப்பிட்டோம் (வசனம் 19). இவ்விடத்தில் பவுல் செயல்விளைவில், நியாயந்தீர்த்தல் என்பதும் தேவனுடைய பொறுப்பாக இருப்பதால் அதையும் நாம் செய்யக்கூடாது என்று கூறினார். பேட்ஸெல் பேர்ரட் பேக்ஸ்ட்டர் என்பவரிடத்தில் ஒருமுறை, ஒரு குறிப்பிட்ட தனிநபர் இரட்சிக்கப்படுவார் என்றா அல்லது இழந்துபோகப்படுவார் என்றா, எப்படி அவர் நினைத்தார் என்று கேட்கப்பட்டது. சகோதரர் பேக்ஸ்ட்டர் அதற்கு, "நீங்கள் இதை ஒரு தவறான நபரிடத்தில் கேட்கிறீர்கள். மக்களை பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ குறிப்பது என்னுடைய பணியல்ல, அது தேவனுடைய பணியாக உள்ளது" என்று பதில் அளித்தார்.[21]

பவுல், நம்பிக்கையின் குறிப்பு ஒன்றை இவ்விடத்தில் கூடுதலாகக் கூறினார். "அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்திரவாதி" என்று கூறியபின்பு அவர், "அவன் [கர்த்தருடைய ஊழியக்காரன்] *நிலைநிறுத்தப்படுவான்*; தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே" என்று கூறினார் (வசனம் 14:4இ; என்னால் வலியுறுத்தப்படுகிறது), இந்தக் கூற்றானது, விவாதத்திலுள்ள ஊழியக்காரர் கர்த்தருக்கு ஊக்கமாக ஊழியம் செய்கிறார் என்று யூகிக்கிறது. அவரது சகோதரர்கள் அவரை சிறுமைப்படுத்தினாலும் அல்லது அவரை ஏற்றுக்கொள்ளாமற்போனாலும், தேவன் இன்னமும் அவரை வரவேற்று உறுதியாக நிலைநிற்கச் செய்கிறார் என்பதே பவுலின் கருத்தாக உள்ளது.

**வலியுறுத்தம்**

"பலமானவர்கள்" "பலவீனமானவர்களை" ஏற்றுக்கொண்டு அவர்களை கீழாக நோக்காதிருக்க வேண்டும் என்று கூறப்பட்டது. "பலவீனமானவர்கள்" "பலமானவர்களை" ஏற்றுக்கொள்ளவேண்டும் (காண்க 15:7) என்றும் அவர்கள் தங்கள் சகோதரர்களை நியாயந்தீர்க்கக் கூடாது என்றும் பவுல் குறிப்பிட்டார். யாரேனும் ஒருவர், "நான் ஒரு பலமான சகோதரனா அல்லது பலவீனமானவனா என்று எவ்வாறு அறிவது?" என்று கேட்கலாம். பலமான சிந்தையுள்ள தனிநபர்களில் பெரும்பான்மையானவர்கள் தங்களை "பலமானவர்கள்" என்று பெயரிட்டுக் கொள்கின்றனர். (ஒரு கிறிஸ்தவர் தம்மை "பலவீனமான சகோதரன்" என்று குறிப்பிட்டதை நான் ஒரே ஒரு வேளை மாத்திரமே கேட்டிருப்பதாக நினைவுகூர முடிகிறது.) ஒருவர் மற்றவரை ஏற்றுக்கொள்ளுதல் பற்றி, பெரும்பான்மையான விஷயங்களில் அது நீங்கள் "பலமானவரா" அல்லது "பலவீனமானவரா" என்ற விஷயம் சிறிதளவே மாறுபாட்டை ஏற்படுத்துகிறது. (நீங்களும் "பலமான" சகோதரர் என்று வலியுறுத்தினால், அது சரியே. நமது வேதபாட வசனப்பகுதியினூடாக நாம் தொடர்ந்து செல்லுகையில் "பலமானவர்கள்" மாபெரும் பொறுப்புக் கொண்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள்.) "பலமானவரோ" அல்லது "பலவீனமானவரோ," ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் செய்தியானது ஒன்றுபோலவே உள்ளது: "*ஒருவர் மற்றவரை ஏற்றுக் கொள்ளுங்கள்*" (காண்க 15:7)!

## முடிவுரை

இந்த பகுதியில் பவுல், கிறிஸ்தவர்கள் ஒருவர் பிறருடன் கருத்து வேறுபடும் போது எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது பற்றிய தமது போதனையைத்

தொடங்கினார். இந்த வேதவசனப்பகுதியிலிருந்து, குறைந்தபட்சம் இரண்டு பாடங்களாவது உங்களுடன் தங்கும் என்று நான் நம்புகிறேன். முதலாவது, ரோமர் 14:1-15:13 வசனப்பகுதியானது, *கருத்து விஷயங்களில்* நாம் கருத்துவேறுபடும்போது எவ்வாறு நடந்துகொள்வது என்று கூறுகிறது. மற்ற சூழ்நிலைகளுக்கும் சில நடைமுறைப் பயன்பாடுகளை ஏற்படுத்த முடியும், ஆனால் கருத்தின் விஷயங்கள் மீதே கவனக்குவிப்பு உள்ளது என்பதை மறவாதிருங்கள். இரண்டாவது, இந்தப் பாடம் மற்றும் இதற்கு அடுத்த பாடம் ஆகியவற்றிற்கான வசனப்பகுதிகளில், கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகளை அதிகம் *ஏற்றுக்கொண்டிருத்தலைக்* கற்றுக்கொள்ளுதல்மீது வலியுறுத்தம் உள்ளது. நம்முடன் கருத்து ஒருமைப்படாதவர்களுக்கு[ம்] நாம் *மரியாதை* காண்பித்தல் அவசியமாக உள்ளது. “இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது!” (சங்கீதம் 133:1).

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

இந்த எடுத்துரைப்பும் “நாம் ஒருவர் மற்றவரைத் தீர்ப்பிடாதிருப்போமாக” (14:5-13அ) என்ற எடுத்துரைப்பும் ஒரே பாடத்தின் இருபகுதிகளாக உள்ளன.

---

குறிப்புகள்

[1]ரோமர் 14ம் அதிகாரம் யூதர்கள் மற்றும் புறஜாதியார்கள் என்று குறிப்பிடுவதில்லை என்பதால், இந்த அதிகாரத்தின் பிரச்சனையை யூதர்கள் எதிர் புறஜாதியார்கள் என்று பலர் கண்ணோக்குவது ஏன் என்று நீங்கள் வியப்படையலாம், கலந்துரையாடலின் முடிவில், பவுல் “பலவீனமான” மற்றும் “பலத்த” என்று குறிப்பிடுவதை விட்டொழித்து யூதர்கள் மற்றும் புறஜாதியார்கள் பற்றிப் பேசினார் (காண்க 15:8-12). [2]இந்த நிலைப்பாட்டைப் பற்றிக்கொண்டுள்ளவர்கள், “*இனிமேல் ஒருவரையொருவர்* குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக” என்று பவுல் கூறிய இடமான 14:13க் குறிப்பிடுகின்றனர். இந்தச் சொற்றொடராக்கம், ரோமாபுரியிலிருந்த கிறிஸ்தவர்கள் கடந்தகாலத்தில் நியாயந்தீர்ப்பதினால் குற்றப்பட்டிருந்தனர் என்பதை பவுல் அறிந்திருந்தார் என்று சுட்டிக் காட்டுகிறது என்று அவர்கள் முடிவு செய்கின்றனர். இருப்பினும், இந்த புத்திமதியில் பவுல், தம்மையும் உள்ளடக்கினார் என்பதைக் கவனியுங்கள் (“நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக”), இது இந்த அறிவுரை இயல்பியல் பொதுவானதாக உள்ளது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. [3]“Kosher” (இது “தகுதியானது” என்பதற்காக எபிரெய வார்த்தையிலிருந்து வந்ததாகும்) என்பது யூதப்பிரமாணத்தின்படி தயாரிக்கப்பட்ட உணவைக் குறிக்கிறது. [4]“Vegan” என்பது இன்றைய நாட்களில் சிலவேளைகளில் கேட்கப்படும் சொற்றொடராக உள்ளது: அதாவது, மாம்சம், பால்பொருட்கள், அல்லது முட்டைகள் ஆகியவற்றை உண்ணாதிருக்கும் நபர் என்று பொருள்படுகிறது. “Vegetarian” என்பது அதிகம் பழக்கமான சொற்றொடராக உள்ளது. [5]Richard A. Batey, *The Letter of Paul to the Romans,* The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 165. [6]பல மொழிபெயர்ப்புகளும் பொழிப்புரைகளும், ரோமர் 14ல் “கருத்து”

அல்லது “கருத்துக்கள்” என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, JB வேதாகமத்தில், 5ம் வசனத்தில் “each must be left free to hold his own opinion” என்றுள்ளது. [7]G. Schrenk, *“dialogismós,”* in Geoffrey W. Bromiley, *Theological Dictionary of the New Testament*, ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. Geoffrey W. Bromiley, abr. (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 156. [8]இந்தக் கருத்து, நூற்றாண்டுகளினூடே எழுத்தாளர்களால் பல்வேறு வகைகளில் விளக்கப்படுத்தப்பட்டது. அகுஸ்தீன் என்பவர் தொடக்கநாட்களில் இருந்தவர்களில் ஒருவர் ஆவார். (Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 1 [Wheaton, Ill.: Victor Books, 1989], 559.) [9]Douglas J. Moo, *Romans*, The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 453. [10]சில நவீனகால நடைமுறைப் பயன்பாடுகளின்றி ரோமர் 14:1-4ஐக் கலந்துரையாடுதல் என்பது ஏறக்குறைய சாத்தியமற்றதாகவே உள்ளது. நான் வாழும் இடத்திலுள்ள கருத்தின் வட்டாரத்தில் பொதுவாகக் கருதப்படக்கூடிய விளக்கங்களுடன் நான் எனது எழுத்தை எல்லையிட்டுக்கொள்ள முயற்சி செய்திருக்கிறேன். அந்த முயற்சியில் நான் தவறியிருந்தால், முன்னதாகவே உங்களிடத்தில் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

[11]ரோமருக்கு எழுதிய நிருபம், 1 என்ற புத்தகத்தில் காணப்படும், “விஷயத்தின் மையம் (1:16, 17)” என்ற பாடத்தில் [பக்கம் 75ல்] “believe” மற்றும் “faith” என்ற வார்த்தைகளுக்கான குறிப்புகளை மறுகண்ணோட்டமிடவும். [12]சில எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் நகைச்சுவைத் தொடுகையொன்றை இவ்விடத்தில் சேர்க்கின்றனர்: “ஏதோ ஒருவகையில் அந்த மாம்சமானது விக்கிரகாராதனைக் கிருமிகள் தொற்றியதாக இருந்தது என்று அவர்கள் நினைத்தனர்.” [13]பல மொழிபெயர்ப்புகளும் பொழிப்புரைகளும் 14ம் அதிகாரத்தின் பிற்பகுதியில் “மனச்சாட்சி” என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, NEB வேதாகமத்தில் 22ம் வசனத்தில் “conscience” என்றுள்ளது. AB வேதாமத்தில் 20, 21 மற்றும் 23ம் வசனங்களில் இவ்வார்த்தை உள்ளது; மற்றும் Phillips வேதாகமத்தில் 20 மற்றும் 23ம் வசனங்களில் இவ்வார்த்தை உள்ளது. [14]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine’s Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 511. (Emphasis mine.) [15]Ibid., 163. [16]இந்தப் பத்தியில் குறிப்பிட்டபடி, ரோமர் 14ன் மற்ற வசனங்களில், ஆங்கிலப் பதிப்பில் “judge” என்ற வார்த்தை காணப்படுவதில்லை என்றாலும், கிரேக்க வசனத்தில் *krino* (“judge”) என்பதன் வடிவங்கள் உள்ளன. [17]Vine, 336. [18]Jimmy Allen, *Romans, The Clearest Gospel of All* (Searcy, Ark.: By the author, 2005), 287. [19]Vine, 562. [20]இது பவுல் பிற இடங்களில் போதித்தவற்றை ஒன்றுமற்றது ஆக்குவதில்லை: சிலவேளைகளில் நாம் உபதேசப் பிழை (ரோமர் 16:17) மற்றும் ஒழுக்கவீனம் (1 கொரிந்தியர் 5) பற்றிய நியாயத்தீர்ப்பு அழைப்புகளை ஏற்படுத்த வேண்டியதாக உள்ளது.

[21]பேட்செல் பேர்ரட் பேக்ஸ்ட்டர் அவர்கள், இதை அபிலேன் கிறிஸ்தவக் கல்லூரியில் 1955ம் ஆண்டு வாக்கில் ஒரு விரிவுரையில் எடுத்துரைத்ததை நான் நேரில் கேட்டேன்.